**செ.வெ.எண்.38** **நாள்.15.04.2017.**

திருநெல்வேலி பானளயங்கோட்டை சென்ட் சேவியர்ஸ் மேல்நிலை பள்ளியில் தமிழ்நாடு அரசு தேர்வாணயத்தின் முலம் ஜெயிலர் பதவிக்கான எழுத்து தேர்வு நடைபெற்றது. மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன் இ.ஆ.ப, அவர்கள் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்கள்.

---

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை சென்ட் சேவியர்ஸ் மேல்நிலை பள்ளியில் தமிழ்நாடு அரசு தேர்வாணயத்தின் முலம் ஜெயிலர் பதவிக்கான எழுத்து தேர்வு இன்று (15.04.2017) நடைபெற்றது. தேர்வு மையத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்கள்.

பின்னர், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது–

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் ஜெயிலர் பதவிக்கான போட்டித்தேர்வு திருநெல்வேலி மாவட்டத்தில் 1. கல்லணை, நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, திருநெல்வேலி டவுண் மற்றும் 2. சென்ட்.சேவியர்ஸ் மேல்நிலைப்பள்ளியிலும் நடைபெற்று வருகிறது. இத்தேர்வில் மொத்தம் 702 நபர்கள் தேர்வு எழுத தகுதி பெற்றனர்.இன்று கல்லணை பெண்கள் மேல்நிலைப்பள்ளி மொத்தம் 400 நபர்களுக்கு 206 நபர்கள் வருகை தந்து உள்ளனர் 194 நபர்கள் தேர்வு எழுத வரவில்லை மேலும் சென்ட்.சேவியர்ஸ் மேல்நிலைப்பள்ளியில் மொத்தம் 302 நபர்களுக்கு 163 நபர்கள் வருகை தந்து உள்ளனர் 139 நபர்கள் தேர்வு எழுத வரவில்லை திருநெல்வேலி மாவட்டத்தில் மொத்தம் 369 நபர்கள் தேர்வு எழுதுகிறார்கள். மொத்தம் 52 சதவீகிதம் நபர்கள் தேர்வு எழுதுகிறார்கள் இத்தேர்வினை கண்காணிக்க துணை வட்டாட்சியர் நிலையில் 1 குழு நியமனம் செய்யபட்டுள்ளது தேர்வு மையங்களில் தேர்வினை வீடியோ கேமரா மூலம் பதிவு செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தேர்வு நாளன்று இன்று தடைபடாத மின்சாரம் வழங்கவும் / பேருந்துகளை தேர்வு மையத்திற்கு சீராக இயக்க உத்திரவிடப்பட்டுள்ளது . தேர்வு நடைபெறும் கல்வி நிலையத்திற்கு காவல் துறை மூலம் போதிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய பரிவு அலுவலர் திரு ரவிசந்திரன் பாளையங்கோட்டை தாசில்தார் திரு தங்கராஜ் வருவாய் ஆய்வாளர் திரு.பாலகிருஸ்ணன் ஆகியோர் உள்ளனர்

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.